# கொழும்பில் சமூகப் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புறப் பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள்



## மேல்நோக்கு

கற்றல் இழப்பு முதல் மிகக் குறைவாகப் போஷாக்கு உட்கொள்ளல் வரையில் இலங்கையின் பலவாறான நெருக்கடிகளின் தாக்கங்கள் கொழும்பில் வாழும் உழைக்கும் வகுப்பினரான வறிய குடும்பங்களின் நாளாந்த வாழ்வினைக் கட்டமைத்துவருகின்றன. இந்த அழுத்தங்கள் ஒன்று சேர்கையில், இவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் குறைவடைவதும் அதிகரிக்கின்றது. இந்தச் சமுதாயங்களைச் சேர்ந்த உழைக்கும் தாய்மார்களுடன் நாம் மேற்கொண்ட ஆய்வில் இருந்து இந்தச் சுமையானது பால்நிலையாக்கப்பட்ட ஒன்று என்பது தெரியவருகின்றது. கொடுப்பனவு செலுத்தப்படும் வேலையினையும் மிகப் பரந்த அளவில் கொடுப்பனவு செலுத்தப்படாத வேலையினையும் பெண்கள் செய்வதுடன் தீவிரமான நேர வறுமைக்கும் பொருளாதார ரீதியாக நிலையற்ற தன்மைக்கும் முகங்கொடுக்கின்றனர். இதற்குப் பல காரணிகளின் சேர்க்கை காரணமாக அமைகின்றது. இவற்றுள் பராமரிப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, மற்றும் மேலதிக வருமானம் ஈட்டும் செயற்பாடுகளைப் பொறுப்பேற்கவேண்டிய தேவை ஆகியன உள்ளடங்குகின்றன. பராமரிப்பின் பாரம்பரிய வலையமைப்புக்கள் சிதைந்துள்ளமையும் அமுலிலுள்ள அரச சேவைகள் போதாதவையாக இருக்கின்றமையும் இம்மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சமூகப் பாதுகாப்பு முறைமைகள் போதாதவையாக இருக்கின்றமையும் இவற்றினை இன்னும் மோசமாக்கியுள்ளன. இவர்களின் தொழில் தெரிவுகள் பிள்ளைப் பராமரிப்புப் பொறுப்புக்களாலும் பாதுகாப்புக் கரிசனைகளாலும் வேலைத் தளம் அருகாமையில் அமைந்துள்ளதா என்பதாலும் பிள்ளைப் பராமரிப்பினைத் தாயின் பிரதான பொறுப்பாக ஆக்கும் இறுக்கமான பால்நிலை நியமங்களாலும் ஆழமாகக் கட்டமைக்கப்ப டுகின்றன.

இந்த ஆய்வின் மூலமாக, கொழும்பிலுள்ள உழைக்கும் பெண்கள் எதிர்நோக்கும் நேரம் மற்றும் பராமரிப்புச் சுமைகளின் யதார்த்தங்களை நாம் ஆராய்ந்தோம். இப்பெண்கள் அவர்களின் வீடுகளிலும் அவர்களின் வேலைத்தளங்களிலும் அவற்றிற்கு அப்பாலும் எதிர்நோக்கும் வெவ்வேறு இயங்கியல்கள் மற்றும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குச் சமூகப் பாதுகாப்பு எவ்வாறு சிறந்த பொருத்தமுடையதாக இருக்கலாம் என்பதை நாம் பரிசீலித்து, நலனோம்புகைக்கும் பொருளாதார மீண்டெழுந்தன்மைக்கும் பராமரிப்பினை ஓர் அத்திவாரமாக அங்கீகரிக்கும் முறைமைகளை உருவாக்கும் அவசரத்தினை வலியுறுத்துகின்றோம். இந்த வாழ்வனுபவங்களை உள்வாங்குவதன் மூலம் கொள்கை விவாதங்களுக்கு உள்ளீடுகளை வழங்குவதற்கு இந்த ஆய்வு உறுதியான சான்றடிப்படையினை வழங்கி நகர்ப்புறப் பராமரிப்பு உட்கட்டமைப்புக்களில் முதலீடுகளையும் வலுப்படுத்துகின்றது.

**”எனக்கு ஓய்வெடுப்பதற்கே நேரமில்லாதிருக்கின்றது. நான் நேரகாலத்துடன் எழும்பிச் சமைதப்பது, பிள்ளைகளுக்கு உணவூட்டுவது, அவர்களுக்கு பால் கலந்து கொடுப்பது, அவர்களைக் குளிக்கவைப்பது என முழு நாளும் கழிந்துவிடுகின்றது” - சீலா***

* அனைத்து பெயர்களும் அநாமதேயமாக்கப்பட்டுள்ளன.

## பிரதானமாகக் கண்டறிந்தவைகள்

கொழும்பில் குடியிருப்புக்களில் வசிக்கும் உழைக்கும் வர்க்கத்தினைச் சேர்ந்த பல தாய்மார்கள் கொடுப்பனவு செலுத்தும் வேலைகளையும் கொடுப்பனவு செலுத்தப்படாத மிக அதிகமான வேலைகளையும் செய்கின்றனர். இதனால் இவர்கள் தீவிரமான நேர வறுமைக்கும் பொருளாதார நிலையின்மைக்கும் முகங்கொடுக்கின்றனர் பல தாய்மார்கள் துப்பரவுசெய்தல், சமைத்தல், பராமரிப்பு வழங்குதல், தையல், அல்லது தேநீர்ச் சேவை போன்ற பாரம்பரியமான பால்நிலை வகிபாத்திரங்களைப் பிரதிபலிக்கும் குறைந்த ஊதியங்களைக் கொண்ட, முறைசாராத் துறைத் தொழில்களில் வேலை செய்கின்றனர். மிகவும் சொற்பமானவர்கள் மாத்திரமே கொடுப்பனவுடனான விடுப்பினை அல்லது ஓய்வூதிய நலன்களைப் பெறுகின்றனர்.

பெரும்பான்மையானவர்கள் எவ்விதமான பிள்ளைப்பராமரிப்பிலும் தங்கியிராமல்  பாடசாலை அல்லது முன்பள்ளி நேரங்களைச் சுற்றித் தம் வேலைகளைக் கட்டமைத்துக்கொள்கின்றனர். தாய்மார்கள் தங்களின் பாட்டிகள் அல்லது மூத்த பெண்பிள்ளைகள் போன்ற பெண் உறவினர்களையே அடுத்துள்ள மிகப் பொதுவான பராமரிப்பு வழங்குனர்களாகச் சார்ந்துள்ளனர்; இந்த ஏற்பாடு பொதுவாக வயதினாலும் நோயினாலும் உணர்வுரீதியான தளம்பல்களாலும், கல்வி அடைவு, தொழில் வாய்ப்புக்கள் அல்லது ஓய்வுநேரப் பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு என்பவற்றினை இவற்றுக்காகத் தியாகம் செய்வதாலும் பொதுவாகப் பாதிக்கப்படுகின்றது. முறைசார்ந்த நாட்பராமரிப்பு நிலையங்கள் மிக மிகக் குறைவாகக் காணப்படுவதுடன் பல தாய்மார்கள் நாட்பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பு, செலவு, தரம் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் உணர்வுரீதியான நலன் ஆகியன பற்றிய அவர்களின் கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

அங்கவீனமான பிள்ளைகளைக் கொண்ட பிள்ளைகளின் தாய்மார்கள் மிகக் கனதியான உடல், உள மற்றும் நிதிச் சுமைகளைச் சுமப்பதுடன் பொதுவாக ஒரேயடியாக வேலைப்படையினையும் விட்டு விலகிவிடுகின்றனர்.

இரவு நேர முறைமாற்று வேலைகளில் பணிபுரியும் பெண்கள் நெறிசார்ந்த எடைபோடல்களுக்கும் பாதுகாப்பு அச்சங்களுக்கும் உடல் ரீதியான சோர்வுக்கும் உட்படுவதாக விபரித்ததுடன் இரவு நேரத்தில் முறைமாற்று வேலை செய்தாலும் வீட்டுப் பொறுப்புக்கள் அப்படியே தொடர்ந்து காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர். இறுக்கமான, உதவியற்ற வேலைத்தளங்கள், குறிப்பாகத் தனியார் துறை வேலைத்தளங்கள் தாய்மார்களைத் தொழிலில் இருந்து அகற்றியுள்ளன அல்லது அவர்கள் முறைசாராத, எதிர்வுகூற முடியாத தொழில்களுக்குச் செல்வதற்கு பலவந்தப்படுத்தியுள்ளன.

பராமரிப்பு நிலையங்கள் உள்ளிட்ட, அணுகத்தக்க, செலவு வகையில் ஈடுகொடுக்கக்கூடிய, பாதுகாப்பான மற்றும் நம்பிக்கைக்குரிய பராமரிப்பு உட்கட்டமைப்புக்கள், பாடசாலை முடிவடைந்த பின்னரான நிகழ்சித்திட்டங்கள், அங்கவீனமானவர்களை உள்ளடக்கும் சேவைகள் ஆகியவை இன்றி உழைக்கும் தாய்மார்கள் தொடர்ந்தும் நேர வறுமைக்கு உட்பட்டவர்களாகவும் பொருளாதார ரீதியாகப் பாதிப்புறுநிலையில் உள்ளவர்களாகவும் உறுதியான வாழ்வாதாரங்களையோ, அல்லது ஓய்வினையோ, ஓய்வுநேரப் பொழுதுபோக்கினையோ, அல்லது தொழில் நகர்வினையோ தொடர முடியாதவர்களாகவும் இருக்கின்றனர்.

## பரிந்துரைகள்

இலங்கையின் பராமரிப்பின் நகர உட்கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது நிலைபேறான முதலீட்டினையும் சமுதாயத்தினை மையப்படுத்திய வடிவமைப்பினையும் நிலைமாற்றமிக்க சமூகப் பாதுகாப்பு அணுகுமுறையினையும் தேவைப்படுத்துகின்றது.

சமுதாயங்களினுள் பிள்ளைக்காப்பகங்களையும் நாட்பராமரிப்பு நிலையங்களையும் பாடசாலை முடிந்த பின்னரான நிகழ்ச்சித்திட்டங்களையும் விரிவுபடுத்துவது மற்றும் வளங்களாகப் பெறுவது அவசியமானதாகும். நிலையங்கள் நீட்டித்த மணித்தியாலங்களையும், தூய்மையான வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன்  மேற்பார்வை செய்யப்படும் விளையாட்டுக்களையும் ஒழுங்குறுத்தல் மேற்பார்வையினையும் கொண்டிருக்க வேண்டும். தாய்மார்களால் சுமக்கப்படும் தீவிரமான, வாழ்க்கை முழுவதுமான, பராமரிப்புச் சுமைகளைக் கருத்திற்கொண்டு, அங்கவீனமான பிள்ளைகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட உட்கட்டமைப்புக்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. இந்தச் சேவைகள் நாளாந்த யதார்த்தங்களையும் கால அட்டவணைகளையும் உழைக்கும் வர்க்கக் குடும்பங்களின் வரம்புகளையும் பிரதிபலிக்கின்றன என்பதை உறுதிப்படுத்த அவை அர்த்தபூர்வமான சமுதாய உள்ளீட்டுடன் திட்டமிடப்பட வேண்டும்.

பிள்ளைப்பராமரிப்புக்கு அப்பால் செல்லுகின்ற பராமரிப்பின் புதிய மாதிரிகளை இலங்கை கட்டாயம் ஆராய்ந்து தாய்மார்களுக்கும் பராமரிப்பு வழங்குபவர்களுக்கும் இயலளவு உருவாக்கம், ஓய்வு மற்றும் ஓய்வுநேரப் பொழுதுபோக்கு என்பவற்றுக்கான அணுகலையும் வாய்ப்புக்களையும் வழங்கவேண்டும்.

ஆகக்குறைந்த ஊதியங்கள், கட்டாயமான கொடுப்பனவுடனான விடுப்பு, பிரசவ நலன்கள், ஒப்பந்தங்கள்  மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் உள்ளடக்கம் உள்ளிட்ட வீட்டு வேலையாட்களுக்கான சட்டப் பாதுகாப்பு, அவர்கள் முறைசார் துறையிலுள்ள தொழிலாளர்களைப் போன்ற அதே உரிமைகளையும் பாதுகாப்பினையும் பெறுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாகும். வீட்டு வேலையாட்களையும் முறைசாராத் துறை வேலையாட்களையும் உரிமைகளைக் கொண்டிருப்பவர்களாக அங்கீகரிப்பதைச் சாதாரணமாக்குவதற்கு கௌரவமான வேலை பற்றிய சமாந்தரமான விழிப்புணர்வு அவசியமானதாகும்.

பிள்ளைகளின் போஷாக்கினை மேம்படுத்தி, தாய்மார்களின் நேர வறுமையினைக் குறைத்து, பெண்களுக்கு வருமானப் பிறப்பாக்க வாய்ப்புக்களை உருவாக்கி, சமுதாய அடிப்படையிலான உணவு வழங்கல் சேவைகளை வலுப்படுத்துவதற்கு பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டங்கள் 5 ஆம் தரத்திற்கு அப்பால் நீட்டிக்கப்பட வேண்டும். குடும்பங்களின் நிதி நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ள போது கூட, பிள்ளைகளின் போஷாக்குத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தி நெருக்கடிமிகுந்த காலப்பகுதிகளில் இவை முக்கியமான சமூகப் பாதுகாப்பு வலையாகவும் சேவையாற்றக்கூடியவையாகும்.

@colombourbanlab
csf-asia.org/colombo-urban-lab